Source: *Tamil Murasu*, p2
Date: 11 June 2025

# ஆழ்கடல் ஆய்வில் சிங்கப்பூர் ஆய்வாளர்கள்: டாக்டர் விவியன்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக (என்யுஎஸ்) ஆய்வார்கள் அக்டோபர் மாதம் இந்தியப் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் ஆழ்கடல் ஆய்வைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் செவ்வாய்க்கிழமை (ஜூன் 10) தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்ட இலாப நோக்கமற்ற ஓஷன்எக்ஸ் (OceanX) எனும் அமைப்புடன் இணைந்து அந்த ஆய்வுப் பயணத்தை அவர்கள் மேற்கொள்வர். அந்த ஆய்வு இந்த வட்டாரத்தைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்களை, குறிப்பாக வளர்ந்து வரும் பிற சிறிய தீவுகளின் அறிவியல் அறிஞர்களை ஒன்றிணைக்கும் என்றார் டாக்டர் விவியன்.

பிரான்சின் நீஸ் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மாநாட்டில் சிங்கப்பூர் தேசிய அறிக்கையை அவர் வழங்கினார்.

கடல் அறிவியல் கல்வி, திறன் மேம்பாட்டை மேம்படுத்தும் உலகளாவிய இலக்குகளுக்கு இந்த ஆய்வுப் பயணம் பங்களிக்கும் என்று சிங்கப்பூர் நம்புவதாக அமைச்சர் விவியன் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் என்பது தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்க கண்டத்திற்கு இடையிலான நீர்ப் பரப்பாகும். பெருங்கடலின் மூன்றில் இரண்டு பங்குப் பகுதியை உள்ளடக்கிய ஆழ்கடல், தேசிய எல்லைகளுக்கு வெளியே உள்ள கடல் பகுதிகளைக் குறிக்கிறது.
சிறிய வளர்ந்து வரும் தீவு நாடுகள் கடல் தொடர்பான அறிவியல் ஆய்வுகளில் பங்கேற்பது மட்டுமன்றி வழிநடத்தவும் வேண்டும் மாநாட்டின் முதல் நாளான ஜூன் 9 அன்று டாக்டர் விவியன் கூறினார்.

அதன்மூலம், அந்நாடுகள் சார்ந்திருக்கும் கடல் துறையை அவற்றால் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் சார்பில் அம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அமைச்சர் விவியன், கடல் சுகாதாரத்திற்கான அறிவியல் ஒத்துழைப்பின் அவசியம் குறித்து ஏவோசிஸ் (Aosis) எனப்படும் சிறிய தீவு நாடுகள் கூட்டணி சார்பாகப் பேசினார். சிங்கப்பூர், பலாவ், மாலத்தீவு, பெலிஸ் உள்ளிட்ட 39 நாடுகள் அதில் உறுப்பினர்களாக உள்ளன.

அதிகார வரம்பிற்குட்பட்ட கடல் பகுதியில் 30 விழுக்காடு சிறிய தீவு நாடுகளின் வசமுள்ளது என்றாலும், கடந்த பத்து ஆண்டுகளாக ஐக்கிய நாட்டுச் சபை நடத்திவரும் கடல் சுகாதாரம் தொடர்பான செயல் திட்டங்களில் 0.3 விழுக்காடு மட்டுமே அவை முன்னிலை வகிப்பதாக டாக்டர் விவியன் தெரிவித்தார்.



உலகின் பிற பகுதிகளைச் சேர்ந்த ஆய்வாளர்களால் பவளப்பாறைகள் நன்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. **படம்: ஏஎஃப்பி**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.